தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 20, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு—2023

1992 ஏப்ரல் 2, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை''.

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 435, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

435—

சேலத்தில் அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் செயல்படுத்த நடவடிக்கை.

*8094 திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலத்தில் அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் செயல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1992 ஏப்ரல் 2

(அ) மற்றும் (ஆ) : சேலத்தில் ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கு தோராய மதிப்பீடு ரூபாய் 3 கோடியே 25 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கட்டிடங்களின் திருந்திய வரைபடத்திற்கு உயர்நீதி மன்றம் ஒப்புதல் அளித்துவிட்டது. எனவே அதனையொட்டி அரசினுடைய தலைமைப் பொறியாளர், பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) அதனை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் அனைத்து நீதிமன்றங்களையும் ஒரே வளாகத்தில் செயல்பட ரூபாய் 3 கோடியே 25 இலட்சம் செலவில் கட்ட இருக்கும் நீதி மன்றக் கட்டிடங்களுக்கான கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலேயிருந்து 'டிசைன்' பெறுவதற்கு தாமதமாகிறது. அவர்கள் 'அப்ரூவல்' அளித்து விட்டார்கள். எனவே ஒரு திருத்திய மதிப்பீட்டை நம்முடைய பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்ட் இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறது. துரிதப்படுத்தி விரைவில் அந்தப் பணி தொடங்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சேலத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்ட பிறகு அந்தக் கட்டிடத்தில் எந்தெந்த நீதிமன்றங்கள் செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய நேரத்தில் அந்த முடிவுகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைந்த நீதிமன்றங்களின் வளாகத்திற்கு முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் அங்கே அடிக்கல் நாட்டிவிட்டு வந்தார்கள். அதற்குப் பின்னாலே இன்னும் அந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டிடம் கட்டப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னேன், "டிசைன்" உயர் நீதி மன்றத்திலேயிருந்து பரிசீலனை செய்து

ஒப்புதல் அளிக்க சற்று கால தாமதம் ஆயிற்று. அவர்களும் இப்போது கிளியர் செய்துவிட்டார்கள். எனவே இனி தாமதம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 436, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

436—

சங்கராபுரத்தை தனி வட்டமாக்குதல்.

* 3380 திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளக்குறிச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து சங்கராபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி வட்டத்தை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆய்வில் உள்ளது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி வட்டாட்சியர் அலுவலகம் எப்போது துவங்கப்படும் என்பதையும் அதற்குரிய கட்டிடங்கள் எப்போது ஆய்வு செய்யப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற செயற் குறிப்பு இன்றைக்கு ஆய்வில் உள்ளது. ஆய்வில் உள்ளது மட்டுமல்ல, இந்த நிதியாண்டில் அது நடைபெறும். இந்த நிதியாண்டில் நடைபெறும்போது இந்த வட்டமும் இரண்டாகப் பிரிக்கப்படும்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வட்டாட்சியர் அலுவலகத்தை சங்கராபுரத்தில் துவக்குவது என்றால், கோட்டைமேடு என்ற பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் தனியாக அதிக பரப்பளவு உள்ள இடங்கள் உள்ளன. மேற்படி இடத்தையே வட்டாட்சியர் அலுவலகத்திற்காக தேர்ந்தெடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.